museum of modern
and contemporary art
sri lanka

PRESS RELEASE

2022 டிசம்பர்

**2023–2025ம் ஆண்டுகளுக்கு CIMAM இன்**
**தலைவராக சுஹன்யா ரஃபெல் நியமிக்கப்பட்டார்**

M+ இன் இயக்குனரான சுஹன்யா ராஃபெல் அவர்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் நவீன கலை தொகுப்புகளுக்கான சர்வதேச குழுவின் (CIMAM) 2023–2025ம் ஆண்டுகளுக்கான தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். 2019 ஆம் ஆண்டு முதல் ஹொங் கொங் இலுள்ள M+ எனும் காட்சி கலை அருங்காட்சியகத்தை ரஃபெல் நடத்தியுள்ளார். இலங்கையின் நவீன மற்றும் சமகால கலை அருங்காட்சியகத்தின் (MMCA இலங்கை) நிறுவனக் குழு உறுப்பினராகவும் ரஃபெல் பணி புரிந்துள்ளார்.

ரஃபெல் தனது நியமனத்தைப்பற்றி பேசுகையில், ”CIMAMஇன் அடுத்த தலைவராக பணியாற்றுவதை ஒரு பெருமையாகக் கருதுகிறேன். எமது நவீன மற்றும் சமகால கலை அருங்காட்சியக சமூகமானது, சிக்கலான மற்றும் சவாலான ஒரு உலகத்தை எதிர்கொள்கிறது. இவ்வேளையில், எனது சக குழு உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் இச்சமூகத்துக்குப் பங்களிக்க நான் உற்சாகமாக உள்ளேன்,” எனக் குறிப்பிட்டார்.

“கடந்த மூன்று ஆண்டுகளில் அதிக கொந்தளிப்புகள் மற்றும் பிரிவுகள் ஏற்பட்டுள்ளன; அத்துடன் உலகளாவிய கோவிட் -19 தொற்றுநோயினால் எமது சமூகங்கள் மேலும் பிரிக்கப்பட்டுள்ளன,” என்றும் ரஃபெல் விபரித்தார். இச்சூழலில் மக்களை ஒன்றிணைப்பதற்கு எங்கள்

Groundfloor, Crescat Boulevard
89 Galle Road
Colombo 03

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

அருங்காட்சியகங்கள் வகிக்கும் பங்களிப்பானது ஒரு அவசர தேவையாக மாறியுள்ளது. இப்பங்களிப்பில் கலைஞர்கள் தமது படைப்புகளில் வழங்கும் கண்ணோட்டம், அவசியமான நுண்ணறிவு, மற்றும் முன்னோக்கு ஆகியன  முக்கிய பங்கு வகிக்கின்றன.